## தமிழக நிகழ்வுகள்

- உச்ச நீதிமன்ற நீதிபதி உத்ரவின் படி, காவிரி மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் ஒழுங்காற்றுக் கழு அமைத்து மத்திய அரசு 22.06.18 ல் ஆணை பிறப்பித்தது.
  - காவேரி மேலாண்மை ஆணையத்தின் தலைமையகம் - **புது டெல்லியில்** அமையவுள்ளது

    தலைவர்- **மசூத் உசைன்**
  - காவேரி **ஒழுங்காற்று குழுவின் தலைமையகம் பெங்களுரில்** அமையவுள்ளது. இதன் தலைவராக- **நவீன் குமார்** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## இந்திய நிகழ்வுகள்

- **பொருளாதார ஒத்துழைப்பு** மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுக்காக **மகாராஷ்டிரா மாநிலமும் கனடாவும்** ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

- பழங்குடியின விவகார அமைச்சகம் **தேசிய பழங்குடியின அருங்காட்சியகத்தை புதுடெல்லியில்** தேசிய அளவிலான பழங்குடி ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து அமைக்க உள்ளது.

- முழுவதும் காகிதபயன்பாடு அற்ற டிஜிட்டல் முறையில் செய்லபடும் மத்திய வர்த்தக அமைச்சகத்துக்கான **வாணிஜ்ய பவன்** என்னும் கட்டிடம் **புதுடெல்லியில்** அமையவுள்ளது.

- **மகாராஷ்டிரா** மாநிலத்தில் ஜுன் 23 2018 முதல் **பிளாஸ்டிக் தடை** செய்யப்பட்டுள்ளது.

## உலக நிகழ்வுகள்

- தெற்கு சூடானில் கலவரத்தை அடக்கும் ஐ.நாவின் அமைதித் திட்டத்தில் பங்கேற்ற இந்திய இராணுவத்தைச் சேர்ந்த **கார்வால் ரைபிள் காலாட் படைக்கு** (Garhwal Rifles Infantry Battalion Group) **Selfless Service** என்ற விருது ஐ.நா.வால் வழங்கப்பட்டது.

## விருதுகள்

- இலக்கிய படைப்பாளிகளை கௌரவிக்கும் வகையில் **சாகித்திய அகாடமி** ஆண்டு தோறும் இளம் எழுத்தளாருக்கு **யுவ புரஸ்கார் விருதுதையும்** சிறுவர் இலக்கியத்திற்கான பால சாகித்யா பரஸ்கார் விருதையும் வழங்கி வருகிறது.
    - 2018- ஆண்டிற்கான **யுவ புரஸ்கார் விருது "அம்பு படுக்கை"** எனும் சிறுகதையை எழுதிய தமிழரான **சுனீல் கிருஷ்ணனுக்கு** வழங்கப்பட்டது.
    - குழந்தைகளுக்**கான பால் சாகித்ய புரஸ்கார்** விருது "சிறகு முளைத்த யானை" என்ற கவிதை தொகுப்பை எழுதிய தமிழரான **கிருங்கை சேதுபதிக்கு** வழங்கப்பட்டது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- ஜப்பானில் நடைபெற்ற **ஆசிய தடகளப் போட்டி** மும்முறை தாண்டுதல் பிரிவில் தமிழகத்தைச் சேர்ந்த **கமல்ராஜ்** என்பவர் 15.5 மீ தாண்டி தங்கப்பதக்ம் வென்றார்.